**மினிபே பிரதேச சபை**

**கண்டி மாவட்டம்**

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூலை 01 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜனவரி 16 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மினிபே பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களின் பிரகாரம் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------

1.3.1 தொங்கல் கணக்குகள்

----------------------------------

தொங்கல் கணக்கில் காணப்படும் ரூபா 13,369 இற்கான செலவு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.2 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

-------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 29,873,508 ஆக காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருடத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,569,432 ஆகும்.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

------------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 24,931,102 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ரூபா 24,475,107 தொகை நிர்மாண வேலை கடன் கொடுத்தோராக காணப்பட்டது. அத்துடன் அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,945,333 ஆகும்.

1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

----------------------------------------------------------

02 கணக்கு விடயங்களின் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால், கூட்டுத்தொகை ரூபா 451,344 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமான பரிசோதனை மேற்கொள்ள முடியாதுள்ளது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

-------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,102,564 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,125,548 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 1,022,984 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

---------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான மிகை முன்னைய ஆண்டிற்கான மிகையுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 7,194,992 இற்கான குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக 2013 ஆண்டின் போது நிதி எதிர்வு கூறல்களில் பலவீனம் காரணமாக 05 விடயங்களில் வருமானம் குறைதல் மற்றும் 04 விடயங்களில் செலவுகள் அதிகரித்தல் காரணமாகியுள்ளது என அவதானிக்கப்பட்டது.

2.3 வருமான நிருவாகம்

-----------------------------

2.3.1 வருமான சேகரித்தல் செயலாற்றுகை

-------------------------------------------------------

மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டு தொடர்பாக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம் உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு | உள்ளவாறான | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா<br>000 | ரூபா<br>000 | ரூபா<br>000 |
| (i) | வீதவரி | 633 | 684 | 556 |
| (ii) | வாடகை | 5,478 | 2,550 | 1,489 |
| (iii) | அனுமதிப் பத்திர கட்டணம் | 13,192 | 13,638 | 85 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 3,801 | 5,724 | 3,535 |

மீளாய்வாண்டு இறுதித் திகதிகளில் உள்ளவாறு ரூபா 5,665,000 இற்கான நிலுவை வருமான மீதி ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.3.2 வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 392,938 இற்கான மீதி ஒன்று காணப்பட்டதுடன் ஆண்டிற்கான பில் போடப்பட்டவை ரூபா 553,934 ஆகும். ஆண்டின் போது அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 53 ஆக காணப்பட்டமையால், 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை ரூபா 443,421 ஆகும். அம் மீதியில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 364,330 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டியிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தில் பிரிவுகள் 158(1) மற்றும் 159(1) இன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுத்து அந் நிலுவையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.3 வாடகை

-----------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,573,641 இற்கான அறவிடப்பட வேண்டிய கடை வாடகை மற்றும் மண் துறை வாடகை நிலுவை காணப்பட்டதுடன் அம்மீதியும் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கடை வாடகை ரூபா 863,648 ஆகும். அந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை ஏதும் 2014 நவம்பர் 21 திகதி வரை கடைபிடித்திருக்கவில்லை.

(ஆ) 2009 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் கடை வாடகை தீர்மாணிக்கப்பட்டிருந்தது. அத்துடன், 2015 ஆண்டு வரை புதிய பெறுமதி மதிப்பீட்டின் பிரகாரம் செயற்படுவதற்கு கணக்காய்வு திகதியாகிய 2014 நவம்பர் 26 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.3.4 நீர் கட்டணம்

-------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் ரூபா 1,583,616 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது நிலுவை தொகையில் அறவீடுகள் நூற்றிற்கு 57 ஆகிய பலவீன மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,879,022 இற்கான நிலுவை தொகையொன்று காணப்பட்டதுடன் அவற்றில் 01 வருடம் காலத்தை மிகைத்துள்ள மீதிகளின் பெறுமதி ரூபா 687,222 ஆகும்.

2.3.5 வர்த்தக வரி

-------------------

(ை) சபையின் அதிகார பிரதேசத்தில் பாரிய அளவில் நடத்தப்படும் செங்கல், நெல் ஆலைகள் வர்த்தகங்கள் தொடர்பாக முறையான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு சபைக்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ை) அதிகார பிரதேசத்தில் நடத்தப்படும் 27 வர்த்தகங்கள் தொடர்பாக வர்த்தக அனுமதிப்பத்திரம் வழங்கப்படாமையால் சபைக்கு ரூபா 96,000 இற்கான தொகையொன்றினை இழந்துள்ளது.

2.3.6 சுற்றாடல் அனுமதிப் பத்திர கட்டணம்

----------------------------------------------------------

2013 ஆண்டு தொடர்பாக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கப்படாமையால், ஒரு வர்த்தகத்தில் இருந்து ரூபா 7,400 வீதம் 18 வர்த்தக நிறுவனங்கள் தொடர்பாக சபை ரூபா 133,200 தொகை ஒன்றினை இழந்துள்ளது.

2.3.7 அறிவித்தல் பலகை கட்டணம்

---------------------------------------------

2013 நவம்பர் 29 திகதிய இலக்கம் 1839 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தலின் iv(ஆ) பகுதியின் பிரகாரம் சபையின் அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருக்கும் 83 அறிவித்தல் பலகைகளின் மூலம் மீளாய்வாண்டிற்கான ரூபா 324,900 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3 செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------

3.1 தொழிற்பாட்டு மூலதன முகாமைத்துவம்

------------------------------------------------------------

மொத்த நடைமுறை சொத்துகளுடன் நடைமுறை சொத்துக்கள் காட்டும் விகிதாசாரமான 1.65:1 ஆக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது அது 1.55:1 ஆக காணப்பட்டமையால் அந்த விகிதாசாரங்கள் உச்ச மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. ஒட்டு மொத்த நடைமுறை சொத்துக்களில் நூற்றிற்கு 62 எனப்படும் ரூபா 29.4 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன் பட்டோராக காணப்பட்டது. அத்துடன், மொத்த நடைமுறை பொறுப்புக்களில் நூற்றிற்கு 86 எனப்படும் ரூபா 24.5 மில்லியன் நிர்மாண வேலை மற்றும் பலவின கடன்கொடுத்தோர் அடங்கியிருந்தனர்.

3.2 செயற்பாட்டு திறமையின்மை

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நீண்ட காலமாக முன் கொண்டுவரப்பட்டுள்ள ரூபா 623,957 இற்கான 05 கணக்கு மீதிகள் தொடர்பாக கவனம் செலுத்தி அவற்றைத் தீர்ப்பதற்காக அல்லது பொருத்தமான செயல் ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மத்திய மாகாண உள்ளூராட்சி அணையாளரின் 2014 ஜுன் 18 திகதிய இலக்கம் 2014/4 கொண்ட சுற்று நிருபத்தின் பிரகாரம், வருமானத்தை அறவீடு செய்வதற்காக நியதிச் சட்ட முறையின் பொறுப்பிற்கு சபை செயலாளர், வருமான பரிசோதகர், வருமான நிருவாகி மற்றும் விடய அலுவலர் பொறுப்பு வாய்ந்தவர்கள் என சுட்டிக் காட்டி இருந்தும், குறிப்பிட்ட வருமானத்தை அறவீடு செய்வதற்காக பொறுப்பு வாய்ந்த அலுவலர்கள் போதியளவு செயற்பட்டிருக்கவில்லை.

3.3 ஒப்பந்த நிருவாகம்

---------------------------

(அ) ஹஸலக்க பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்தல்

---------------------------------------------------------------------------------------------------

பிரதேச சபையின் பிரேரனையின் பிரகாரம், ஹஸலக பொது விளையாட்டு மைதானம் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 4,165,000 இற்கான ஏற்பாடுகள் விளையாட்டு அமைச்சில் இருந்து 03 கட்டங்களில் வழங்கப்பட்டிருந்தது. இந்த நிர்மான வேலையை ஒரே கட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு இயலுமாக இருந்தும் கூட, பகிரங்க கேள்வி முறையை கடைபிடித்தலை தவிப்பதற்காக 03 கட்டங்களின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) 04 வாய்க்காலை அபிவிருத்தி செய்தல்

----------------------------------------------------------

ரூபா 436,713 தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஹஸலக்க பல் நோக்கு கூட்டுறவு சங்கத்துடன் 2014 மார்ச் 03 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு நிர்மாணம் சாட்டப்பட்டு வேலைக்காக 2014 ஏப்ரில் 10 திகதி ரூபா 300,000 செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையினால் 178 பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம், கேள்வி நடைமுறை கடைபிடிக்கப்படாமல் ஹஸலக்க பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு நிர்மாண வேலைகள் சாட்டப்பட்டிருந்தன.

ii. மண் வெட்டப்பட்டு பாதையில் நிறப்பி தொழில்நுட்ப ஆலோசனையின் பிரகாரம் பாதையின் அங்கீகரிக்கப்பட்டுள்ள மண் வகை பரப்பி ரோலர் மூலம் தகர்த்து பாதையை அபிவிருத்தி செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்மாண வேலை சாட்டப்பட்டு முதலாவது பகுதி கொடுப்பனவு ரூபா 300,000 ஒப்பந்தகார சங்கத்திற்கு 2014 ஏப்ரல் 10 திகதில் 359 ஆம் இலக்க உறுதிச் சான்று மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் 2014 ஏப்ரல் 27 மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது பாதையை பொது மக்களுக்கும் பயன்படுத்த இயலாத விதமாக சேற்றுடனான சதுப்பு நிலப் பாதையாக மாற்றப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.

iii. நிறைவேற்றப்பட்டிருந்த வேலைப் பகுதிகளுக்காக ஒப்பந்த சங்கத்தினால் பில் பத்திரம் சமர்பிக்கப்பட்ட பின்னர் மேற்பார்வை தொழில் நுட்ப அலுவலர் பரிசோதனை மேற் கொண்டு, சான்று படுத்திய பின்னர் கொடுப்பனவு மேற் கொள்ளப்பட வேண்டும். எனினும், அதே முறையை பில் பத்திரங்கள் சமர்பிக்கப்படாமல் 2014 ஏப்ரல் 10 ஆந் திகதி 359 ஆம் இலக்க உறுதிச் சான்றின் மூலம் முதலாவது பகுதிக் கொடுப்பனவாக ரூபா 300,000 தொகை ஒன்று ஒப்பந்த சங்கத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது.

4 கணக்கு விடயத் தன்மையும் நல்லாட்சியும்

--------------------------------------------------------------

4.1 கூட்டிணைப்புத் திட்டம்

--------------------------------

மீளாய்வாண்டின் போது சபையின் கூட்டிணைப்புத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவு திட்டம்

-----------------------------

ரூபா 32,255,547 இற்கான மூலதன செலவுகள் ஒன்று சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனினும் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

-------------------------------

சபையின் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

------------------------------------------------------------

சபையினால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அமைக்கப்பட்டிருக்காமையால் குழு கூட்டங்கள் நடைபெறவில்லை.

4.5 அகக் கணக்காய்வு

----------------------------

மீளாய்வாண்டின் போது சபையின் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் செலவுகளை ஒப்பிடும் போது 03 வருமான விடயங்கள் நூற்றிற்கு 13 முதல் நூற்றிற்கு 53 வரையும், 04 செலவு விடயங்கள் நூற்றிற்கு 28 முதல் நூற்றிற்கு 100 வரையும் முரண்களை அவதானிக்கப்பட்டமையானது, பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

(ஆ) 04 வருமான தலைப்புக்களை சேர்ந்த 05 துணை விடயங்கள்களுக்காக பாதீடு செய்யப்பட்ட ரூபா 47,260,000 இற்கான வருமானத்தின் அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 22.7 ஆகும்.

(இ) 04 வருமான தலைப்புக்களை சேர்ந்த 06 துனை விடயங்களுக்காக பாதீடு செய்யப்பட்டிருந்த ரூபா 42,000 இற்கான வருமானத்தில் ஒரு தொகையேனும் வருமானம் என உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றன.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கணக்காய்வு

(இ) ஒப்பந்த நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்